රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/පොදු
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி: / Date: 2023.09.06

அமைச்சின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் நியமனங்களை உறுதிப்படுத்தல் மற்றும் அவ்வுத்தியோகத்தர்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இற்கு பதவி உயர்வு வழங்குதல் தொடர்பானது.</u>**

2013 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவைக்கு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள், 1774/31 ஆம் இலக்க 2012.09.07 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட இலக்கம் 1745/11 மற்றும் 2012 பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளியிடப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை பிரமாணக் குறிப்பின் படி குறைந்தபட்சம் 10 வருடம் செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தினை பூர்த்தியாகும் தினத்தன்று (ஏனைய தகைமைளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின்) அதாவது 2023 ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையின் தரம் II ற்கு தரமுயர்வு பெறுவதற்கு தகைமையடைகின்றார்கள்.

02. எனினும் 10 வருடம் செயலூக்கம்மிக்க சேவைக்காலத்தினை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கிடையில் வினைத்திறன்கான் தடைதாண்டல் பரீட்சையை சித்தியடையாமை, சரியான முறையில் ஆவணங்களை முன்வைக்காமை போன்ற காரணங்களினால் குறிப்பிடத்தக்களவான அலுவலர்களின் நியமனம் இன்னும் உறுதிப்பட்த்தப்படவில்லை. அதனால் உங்கள் அமைச்சில் / திணைக்களத்தில் / அலுவலகத்தில் சேவையாற்றுகின்ற 2013 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கிடையில், நியமனத்தை உறுதிப்படுத்துவதுடன் தொடர்புடைய சகல தகைமைகளும் பூர்த்தி செய்துள்ள போதும் இன்றுவரை நியமனம் உறுதிப்படுத்தப்படாத உத்தியோகத்தர்களின் தகவல்கள் இத்துடன் அனுப்பி வைக்கப்படும் மாதிரிக்கு ஏற்ப பூர்த்தி செய்து அதன் மென்பிரதியை dcs-iv@pubad.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 2023.09.30 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு அனுப்பிவைக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

03. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தரம் III இன் உத்தியோகத்தர்கள் தொடர்பில் நியமனத்தை உறுதிப்படுத்துவதற்காக பரிந்துரைகளை அனுப்பியுள்ள போதிலும் இன்றுவரை உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்படாதிருப்பின் இவ் அமைச்சின் இணையத்தளத்தில்

வெளியிடப்பட்ட 2021.09.17 அந் திகதிய CS/DOS/Policy/පොදු/01 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி குறித்த ஆவணத்தில் உத்தியோகத்தரின் பெயர் வெளியிடப்பட்டுள்ளதா என பார்த்து அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பின் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படும் ஆவணங்களை, மிகவிரைவில் எனக்கு அனுப்பி வைக்குமாறும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

04. மேலும், இதுவரையிலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நியமனங்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சகல தகைமைகளும் பூர்த்தி செய்திருப்பினும் நியமனத்தை உறுதிப்படுத்தளுக்கான பரிந்துரைகளை இதுவரையிலும் முன்வைக்காத உத்தியோகத்தர்களின் நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்களை உங்களது பரிந்துரைகளுடன் மிகவிரைவில் எனக்கு அனுப்பி வைக்குமாறும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்./ எஸ் .ஆலோகபண்டார

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

அமைச்சின்/ திணைக்களத்தின்/ காரியாலயத்தின பெயர் :

| தொடரி லக்கம் | நியமன இலக்கம் | அலுவலரின் பெயர் | நியமனத் திகதி | வினைத்திறன்கான் தடைப் பரீட்சையை பூர்த்தி செய்த திகதி | நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளதா? | | உறுதிப்படுத்துவதற்கு தேவையுடைய ஆவணங்கள் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது / இல்லை | பரிந்துரைகளை முன்வைத்த பின்னர் உறுதிப்படுத்துவதற்கு தேவையுடைய ஆவணங்கள் உள்ளதெனில் அவ் ஆவணங்களை முன்வைத்த திகதி | நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்க வில்லையாயின் அதற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆம் / இல்லை | ஆம் எனின் திகதி | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

நிறுவன தலைவரின் கையொப்பம் :

நிறுவன தலைவரின் பதவி முத்திரை :